பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 18 செவ்வாய்க்கிழமை 01.02.2022 கதிர் 314

## பல பாகங்களில் திடீர் மின் தடை

நாட்டின் பல பாகங்களில் இன்று மின் தடை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது

இதேவேளை, நுரைச்சோலை லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் 3 ஆவது மின் பிறப்பாக்கி இன்று மீண்டும் பழுதடைந்துள்ளது என இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

☞2

# ஓட்டோவுடன் ரயில் மோதி கோர விபத்து; தந்தை, தாய், மகன், மருமகள் உயிரிழப்பு



### காலியில் பெரும் துயரம்

காலி, பூஸா - வெல்லப்பட பகுதி ரயில் கடவையூடாகக் கடந்த ஓட்டோவை ரயில் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து இன்று முற்பகல் 10.45 மணியளவில் இடம் பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில், குறித்த ஓட்டோவை மோதுண்டது.

காலி, பூஸா பகுதியைச் சேர்ந்த தந்தை, தாய், மகன் மற்றும் மருமகள் ஆகியோர் ஓட்டோவில் பயணித்தனர். மூவர் சம்பவ இடத்தில் பலியாகினர். மற்றைய ஒருவர் படுகாயமடைந்த நிலையில் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்தார்.

### "உயிரைக் குடிக்கும் இந்தியப் படகைத் தடுத்து நிறுத்து"

# மருதங்கேணி பிரதேச செயலகம் அப்பகுதி மீனவர்களால் முற்றுகை

### சமரசம் பேச வந்த அமைச்சர் டக்ளஸூடன் முறுகல் நிலை





(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்., வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக அப்பகுதி மீனவர்கள் இன்று காலை 7.30 மணி முதல் முற்றுகைப் போராட்டம் மேற்கொண்டனர்.

அண்மையில் வத்திராயன் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்களின் உயிரிழப்புக்கு நீதி கோரியும், இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

☞2

## மேலதிக வகுப்புக்களுக்கு நள்ளிரவு தொடக்கம் தடை

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை இலக்காகக் கொண்ட பயிற்சி வகுப்புக்கள் மற்றும் மேலதிக வகுப்புக்களுக்கு இன்று நள்ளிரவு முதல் தடை விதிக்கப்படுகின்றது எனப் பரீட்சைகள் திணைக்களம்

☞2

## பொரளை கைக்குண்டு விசாரணையை மேற்பார்வையிட திலீப பீரிஸ் நியமிப்பு

பொரளையில் உள்ள அனைத்து பரிசுத்தவான்களின் தேவாலயத்திலிருந்து கைக்குண்டு மீட்கப்பட்டமை தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் விசாரணைகளை மேற்பார்வையிடுவதற்கு

☞2

## மீனவர்களின் போராட்டத்தால் சுப்பர்மடம் இன்றும் முடக்கம்!

அத்துமீறும் இந்திய மீனவர்கள் தமது பகுதி மீனவர்களைக் கொலைசெய்யும் நடவடிக்கைகள், மீன்பிடி உபகரணங்களை அழிக்கும் செயற்பாடுகள் உட்பட அடாவடித்தனங்களுக்கு எதிராக வடமராட்சி - சுப்பர்மடம் பகுதியைச் மீனவர்கள் இன்று இரண்டாவது நாளாகவும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல வழிகளிலும் போராடிய தமக்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என்றும், தீர்வு கிடைக்கும் வரை வடமராட்சியின் அனைத்து வீதிகளையும் முடக்கி போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர்கள் எச்சரித்தனர்.

## பலாலி - வளளாய் வீதியும் முடக்கம்



(எஸ்.நிதர்ஷன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக யாழ்ப்பாணம், பலாலி - வளளாய் மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் இன்று ஈடுபட்டனர்.

இதனால் பருத்தித்துறை - பொன்னாலை வீதியின் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டது. போராட்டத்தை முன்னெடுத்த மீனவர்கள் வீதிகளின் குறுக்கே படகுகள் மற்றும் வலைகளைப் போட்டு தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மேலதிக வகுப்புக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகி, மார்ச் மாதம் 5ஆம் திகதி வரை இடம்பெறும்.

இதற்கமைவாக துறைசார் விரிவுரையாளர்கள், கருத்தரங்குகள் மற்றும் வகுப்புக்களை நடத்துவதும், பரீட்சையை இலக்காகக் கொண்ட வினாத்தாள்களை அச்சிடுவதும், பகிர்ந்தளிப்பதும், இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக விளம்பரப்படுத்துவதும், பரீட்சை இடம்பெறுவதற்கு 5 நாட்களுக்கு முன்னர் இவ்வாறான வினாத்தாள்கள் வழங்கப்படும் எனச் சுவரொட்டிகள் மற்றும் பெனர்கள் மூலம் அறிவிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்த ஒழுங்கு விதிகளை மீறுவோர் தொடர்பில் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது பரீட்சைத் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மாணவர்களுக்கு வசதியாக 29 வைத்தியசாலைகளில் உயர்தரப் பரீட்சை மத்திய நிலையங்கள் நிறுவப்படும் எனவும் அவர் கூறினார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான மாணவர்கள் இந்தப் பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

## பொரளை கைக்குண்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரேஷ்ட பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் திலீப் பீரிஸை சட்டமா அதிபர் நியமித்துள்ளார்.

இதன்படி, கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மற்றும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பதில் பணிப்பாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நெவில் டி சில்வா ஆகியோருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகத் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவர் கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்திர ஜயசூரிய முன்னிலையில் இன்று பிரசன்னப்படுத்தப்பட்டார்.

## மருதங்கேணி பிரதேச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது மருதங்கேணி பிரதேச செயலகத்தின் இரண்டு வாசல்களையும் முடக்கி பிரதான வீதியில் அமர்ந்திருந்த மீனவர்கள், 'எமது கடற்பரப்பு இந்தியாவுக்கு விற்கப்பட்டதா?', 'உயிரைக் குடிக்கும் இந்தியப் படகைத் தடுத்து நிறுத்து', 'இந்தியப்படகுகளுக்குநாங்கள் இரையா?', 'வலை வீச உயிர்ப் பயம்', 'என்ன செய்வோம்?', 'எமது கடல் எமக்கு வேண்டும், கடற்றொழில் அமைச்சே திரும்பிப்பார்', 'மீனவர்களைக் கொல்லாதே' போன்ற கோஷங்களையும் எழுப்பினர்.

சிலமணி நேரங்களின் பின்னர் அங்கு வருகைதந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போராட்டக்காரர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில், இந்திய மீன்பிடிப் படகுகளின் வருகையைத் தடுப்பதாகவும், எதிர்வரும் திங்கட்கிழமை பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு நட்டஈடு வழங்குவது சம்பந்தமாக விசேட அமைச்சரவை பத்திரம் ஒன்றை தாக்கல் செய்ய இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது இலங்கைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்தியப் படகுகளைக் கைதுசெய்வது தொடர்பிலும், அவ்வாறு அதனை மீறி வருகை தந்தால் அவற்றை இலங்கை மீனவர்கள் பிடிப்பதற்கு அனுமதி கொடுக்க எழுத்து மூலம் அனுமதி தர வேண்டும் என அமைச்சர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் போராட்டக்காரர் ஒருவர் கோரிக்கை விடுத்தார்.

நான் வாயால் சொல்லும் வாக்குறுதியும் எழுத்தில் தரும் வாக்குறுதியும் ஒன்றுதான். அதனால் எனது வாக்குறுதியை நம்புங்கள் எனக் கூறியபோது அதனைப் போராட்டக்காரர்கள் ஏற்க மறுக்கவே அங்கிருந்து கடற்றொழில் அமைச்சர் வெளியேறிச் சென்றார்.

இதையடுத்து உயிரிழந்த மீனவர் இருவரின் இறுதிச் சடங்கையும் மேற்கொள்ளும் பொருட்டு தற்காலிகமாக போராட்டத்தைக் கைவிடுவதாகவும், நீதி கிடைக்காவிட்டால் தொடர்ந்தும் போராடுவோம் எனவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டம் காரணமாக மருதங்கேணி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அலுவலகத்துக்குள் நுழைய முடியாமல் வெளியில் காத்திருந்ததுடன் அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டும் இருந்தனர்.

## பல பாகங்களில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த டிசம்பர் முதல் செயலிழந்திருந்த குறித்த மின் பிறப்பாக்கி சீர்செய்யப்பட்டு, நேற்று மீண்டும் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டது.

இந்நிலையில், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மேற்படி மின் பிறப்பாக்கி இன்று மீண்டும் செயலிழந்துள்ளது.

இதனால் தேசிய மின் கட்டமைப்பில் 270 மெகாவோட் மின்சாரம் பற்றாக்குறை ஏற்படக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மின்சார விநியோகத் தடை ஏற்படுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது எனப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.










காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பலம் உணர்ந்து செயற்படுக

இலங்கைத் தமிழர்கள் மிக முக்கியமான ஒரு கால கட்டத்தில் இன்று நிற்கின்றார்கள். புத்திபூர்வமாகவும், யதார்த்தப் புறவுண்மைகளைப் புரிந்து கொண்டும், அவர்கள் செயற்படுவது காலத்தின் கட்டாயம். வெறும் உணர்ச்சிபூர்வமாக மட்டும் விடயங்களை அணுகிக் கையாளும் வேளை இதுவல்ல. தமிழ் மக்களின் தலைவர்கள் என்று கூறிக் கொள்வோர் தங்கள் மக்களின் அநாதரவான நிலைமையைப் புரிந்து கொண்டு காரியமாற்ற வேண்டும். அதற்கேற்ப முடிவுகள், தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

தலைவர்கள் தமது மக்களின் அகப்பலம், புறப்பலம் போன்றவற்றை மதிப்பீடு செய்து, அந்த யதார்த்த நிலைமை புகட்டும் பாடங்களைக் கவனத்தில் கொண்டு, விடயங்களைக் கையாள வேண்டும்.

ஒரு காலத்தில் தமிழர்களின் அகப்பலமாக இருந்த விடுதலைப் புலிகள் இயக்கம் முப்படைகளையும் வரித்து, குறிப்பிடத்தக்க பலமான கட்டமைப்பாக விஸ்வரூபம் எடுத்திருந்தது. தமிழர் தேசத்தை அடக்க முற்பட்ட சக்திகளுக்கு எல்லாம் சவால் விடும் வலிமை அதனிடமிருந்தது.

அச்சமயத்தில் தமிழினத்துக்குப் புறப்பலமாகவும் உருவெடுத்திருந்த இந்தியாவுடன் முரண்டுபடும் நிலைமைக்கு விடுதலைப் புலிகள் வளர்ந்திருந்தனர்.

சரி, பிழை – நீதி நியாயம் – எந்தப் பக்கம் இருந்தாலும், அந்த மோதலின் இறுதி விளைவு தமிழர் தரப்புக்கு எத்தகைய பாதிப்பைத் தந்தது என்பதும் கண் கூடு. வரலாற்று அனுபவத்திலிருந்தும் நாம் பாடத்தைப் படிக்காமல் இருந்தால் – அந்தப் பாடத்தில் இருந்து பிழைக்கும் வழியை உய்த்துணர முடியாதவர்களாக இருந்தால் – கடவுள் வந்தும் கூட எம்மைக் காப்பாற்ற முடியாது என்பதுதான் நிதர்சனம்.

இன்று எங்களிடம் இருக்கும் அகப்பலம் என்ன? புறப்பலம் என்ன?

இருநூற்றி இருபத்தியைந்து ஆசனங்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் வெறும் ஒன்றரை டசின் இடங்கள்தான் எமக்கிருக்கும் அகப்பலம். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை வைத்திருக்கும் ஆட்சித் தரப்புக்கு முன்னால் அந்தப் பலம் வெறும் தூசு. கடந்த நல்லாட்சி அரசின் காலத்திலாவது ஒரு கட்டத்தில் அரசை நாடாளுமன்றத்தில் காப்பாற்றும் வலிமை என்ற திறப்பு தமிழர் தரப்பிடமிருந்தது. இப்போது அதுவும் இல்லை. இந்த அற்ப அகப்பலத்தை வைத்துக் கொண்டு ஆட்சித் தரப்பை நாம் மிஞ்சி எதனையும் பெறமுடியாது. தேவையானால் சில அரசியல் தலைவர்களைப் போல கெஞ்சி – இரந்து – பிச்சை போல ஏதேனும் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வளவே.

தமிழரின் நியாயமான உரிமைக் கோரிக்கை மீது சர்வதேசம் கொண்டிருக்கும் கரிசனைதான் இன்று நமக்கிருக்கும் ஒரே – பிரதான – புறப்பலம். அகப்பலத்தால் அதிகம் சாதிக்க முடியாத நாம் புறப்பலம் பற்றித்தான் மிகவும் கரிசனை கொண்டு செயற்பட வேண்டும். அது ஒன்றே இன்று நமக்குள்ள ஒரே மார்க்கம்; வழி.

இன்றைய நிலையில் சர்வதேச ஆதரவு – புறப்பலம் – என்று வகையிட்டால் அதில் பிரதானமானது இந்திய ஆதரவு.

அது ஒன்றே இன்று தமிழர்களுக்கான பிரதான கொழுகொம்பு. இந்தியப் பக்கத்தில் என்ன சரி, பிழை இருந்தாலும் அதனைப் பெறுமையோடும் யதார்த்தமாக அணுகுவதும் கையாள்வதும் தான் தமிழ் தலைமைகளுக்கு மிகவும் முக்கியமானது.

எண்பதின் நடுப்பகுதியில் இருந்து இரண்டரை தசாப்த காலம் இந்தியாவுடன் முரண்பட்டு நின்றமையின் பலன்களைக் கடைசியில் தமிழ் மக்களே அனுபவிக்க வேண்டியதாயிற்று.

இன்றைய இக்கட்டு நிலையில் கொள்கை, கோட்பாடு என்று சில தலைவர்கள் மக்களை மாயையில் மாட்டி வைத்துக் கொண்டு, ஒரு மரணப் பொறியை நோக்கி நடத்திச் செல்கிறார்களோ என்ற அச்சநிலை தோன்றுகின்றது. அது வரலாற்றுப் பெருந் தவறாகிவிடும்.

# மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு வவுனியாவில் ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு



வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மக்கள் நலன் சார்ந்து முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டமானது வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான கு.திலீபன் ஆகியோரின் இணைத்தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூட்டத்தில் நேற்று (திங்கட் கிழமை) காலை முதல் பிற்பகல் 2.15 மணி வரை இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வு தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்குக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் புகைப்படம் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், அதன் பின் உள்ளே செய்தி சேகரிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

குறித்த அறிவிப்பானது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமாரால் தெரிவிக்கப்பட்டது என மாவட்ட செயலக தகவல் தொடர்பாடல் உத்தியோகத்தர் உப்புல் பால சூரிய ஊடாக ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 2.15 மணிவரை ஊடகவியலாளர் மண்டப வாயிலில் காத்திருந்து கூட்டம் முடிவடைந்த பின் அது தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் தெரிவித்தவை வருமாறு :–

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் மக்கள் நலன் சார்ந்த விடயங்கள் பேசப்படும் போது அதன் உண்மைத் தன்மை மற்றும் அதன் நிலைமைகள் தொடர்பிலும், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் நிலைப்பாடு தொடர்பிலும் மக்கள் அறிந்து இருக்க வேண்டியது ஒரு ஜனநாயக உரிமை. அது தொடர்பில் மக்களுக்குக் கருத்துக்களைக் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பும் ஊடகங்களுக்கு இருக்கின்றது.

இந்த நிலையில் ஊடகவியலாளர்களின் சுதந்திரமான செயற்பாட்டுக்கும், தகவல் வெளியிடும் உரிமைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக அதிகாரிகள் இவ்வாறு நடந்து கொண்டமை குறித்தும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபனிடம் கூட்டம் முடிவடைந்த பின் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது, அவ்வாறு தெரிவிக்கப்பட்டது எனக்குத் தெரியாது. அவ்வாறு நாம் எந்த தீர்மானமும் எடுக்கவில்லை.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் பேசுவதாகவும், இனிவரும் காலங்களில் வழமை போன்று ஊடகவியலாளர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# நெத்தலியாற்றுப் பகுதியில் கோடாவுடன் இருவர் கைது



கிளிநொச்சி – தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாற்றுப் பகுதியில் கோடா மற்றும் கசிப்புடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாற்றுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடைபெறுகிறது எனத் தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சதுரங்கவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டது.

இதன்போது 305 லீற்றர் கோடா மற்றும் 65 லிட்டர் கசிப்புடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனத் தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்துள்ளார்.

# களுத்துறை கடையில் துணிகரக் கொள்ளை!

வடக்கு களுத்துறை காலி வீதியிலுள்ள அட்டபிரிகர கடையில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது. திங்கட்கிழமை பிற்பகல் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு கொள்ளையர்கள் கடைக்கு வந்து பணிப்பெண்களை துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

பணிப்பெண் ஒருவரின் கழுத்தில் கட்டியிருந்த தங்க நகையையும் கொள்ளையர்கள் பறித்துச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் களுத்துறை வடக்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சம்பவம் விற்பனை நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமெராவில் பதிவாகியுள்ளது.

# யேமன் உள்நாட்டுப் போரில் 1,500 சிறுவர்கள் உயிரிழப்பு




யேமன் உள்நாட்டுப் போரில் ஹௌத்தி கிளர்ச்சியாளர்களால் போரில் ஈடுபடுத்தப்பட்ட சுமார் 1,500 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பாதுகாப்புச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த 300 பக்க அறிக்கையில், 2020ஆம் ஆண்டு உள்நாட்டுப்போரில் ஹௌத்தி கிளர்ச்சியாளர்களால் ஈடுபடுத்தப்பட்ட 1,406 சிறுவர்களின் பட்டியலையும், அடுத்த ஆண்டு ஜனவரி மற்றும் மே மாதங்களுக்கு இடையில் 562 சிறுவர்களின் பட்டியலையும் பெற்றது என அக்குழுக் கூறியுள்ளது.

2015 ஆம் ஆண்டு கிளர்ச்சியாளர்கள் மற்றும் யேமன் அரசுக்கு இடையே உள்நாட்டுப் போர் தொடங்கியதிலிருந்து பத்தாயிரத்திற்கும் அதிகமான சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கிளர்ச்சியாளர்கள் மீது சவுதி தலைமையிலான கூட்டுப்படைகள் நடத்தும் வான்வழி தாக்குதல்கள் இன்னும் பல பொதுமக்கள் உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஹௌத்தி கிளர்ச்சியாளர்களின் முழக்கமான அமெரிக்காவுக்கு மரணம், இஸ்ரேலுக்கு மரணம், யூதர்களை சபிக்கவும், இஸ்லாத்திற்கு வெற்றி' என்ற முழக்கத்தை முழங்க அக்குழந்தைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்' என, 4 உறுப்பினர்கள் அடங்கிய அக்குழுவின் நிபுணர்கள் கூறினார்கள் என ஏபி செய்தி முகமை தெரிவித்துள்ளது.

'ஒரு முகாமில் 7 வயதுக்கும் குறைவான சிறுவர்களுக்கு ஆயுதங்களை சுத்தம் செய்யவும், ராக்கெட்டுகளை தவிர்க்கவும் கற்றுக்கொடுக்கப்பட்டது' என அவர்கள் தெரிவித்தனர்.

'பாடசாலைகள், கோடைக்கால முகாம்கள் மற்றும் மசூதிகளைப் பயன்படுத்தி சிறுவர்களைச் சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும்' என அக்குழு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்தது மற்றும் அவ்வாறு செய்யாதவர்களுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் அக்குழு பரிந்துரைத்தது.

# டுபாயில் பறக்கும் படகு




டுபாயில் சுவிஸர்லாந்து நாட்டு தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் அமீரக நிறுவனத்தின் கூட்டு முயற்சியில், தி ஜெட் என்ற பெயருடைய பறக்கும் படகு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சொகுசு படகாக உருவாக்கப்பட்டுள்ள இதில் 8 முதல் 12 பேர் வரை பயணம் செய்ய முடியும். இதில் இரண்டு எரிபொருள் செல்கள் பொருத்தப்பட்டுள்ளது.

ஹைட்ரஜன் எரிசக்தியால் இயங்கும் இந்தப் படகின் வெள்ளோட்டம் விரைவில் டுபாய் கடல் பகுதியில் காண முடியும் என அந்த தனியார் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இந்த படகு இயங்கும்போது சத்தம் வருவது இல்லை. மேலும் தண்ணீருக்கு 80 செ.மீ உயரத்துக்கு மேல் பறந்து செல்லும். ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்குவதால் இதில் இருந்து புகை போன்ற உமிழ்வுகள் வெளியேறுவதில்லை.

எனவே இந்தப் படகு சுற்றுச்சூழலுக்கு மிகவும் உகந்ததாக இருக்கும் என அதன் தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த பறக்கும் படகு மணிக்கு 75 கி.மீ வேகத்தில் செல்லும் திறனுடையது.

## கொங்கோவில் ஐ.நா நிபுணர்கள் கொலை போராளிகளுக்கு மரண தண்டனை

கொங்கோ குடியரசில், இரண்டு ஐ.நா. நிபுணர்களின் கொலையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பல போராளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஸ்வீடிஷ் – சிலி ஜைடா காடலான் மற்றும் அமெரிக்கரான மைக்கேல் ஷார்ப் ஆகியோர் 2017 இல் கசாய் பகுதியில் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர்.

அரசாங்கப் படைகளுக்கும் ஒரு போராளிக் குழுவிற்கும் இடையே இடம்பெற்ற மோதலை அடுத்து, அவர்கள் மனித புதைகுழிகள் குறித்து விசாரணையை மேற்கொண்டிருந்தனர்.

அவர்களின் மொழிபெயர்ப்பாளரான பெதுஷிண்டெலாவும் கொல்லப்பட்ட நிலையில் கடத்தப்பட்டு 16 நாள்களுக்குப் பின்னர் அவர்களது உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

நான்கு வருட விசாரணையின் முடிவில் இராணுவ நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட 51 போராளிகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

## நியோகோவ் வைரஸ் குறித்து ஆராய வேண்டும் உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தல்




தென் ஆப்பிரிக்காவில் மிக தீவிரம் வாய்ந்த 'நியோகோவ்' என்ற புதிய வகை கொரோனா வைரஸ் குறித்து இன்னும் விரிவாக ஆராயப்பட வேண்டும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.


கொரோனா வைரஸ் பரவத்துவங்கிய சீனாவின் வூஹான் நகரை சேர்ந்த ஆய்வாளர்கள் சமீபத்தில் ஆய்வு மேற்கொண்டனர். இதில் 'நியோகோவ்' என்ற புதிய வகை கொரோனா வைரஸ் தென் ஆபிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ளது. இது தற்போது பரவி வரும் கொரோனா வைரஸின் உருமாறிய வகை அல்ல என்றும் மத்திய கிழக்கு நாடுகளில் 2012 மற்றும் 2015ல் பரவி மிகப் பெரிய அளவில் நுரையீரல் பாதிப்புகளையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்திய கொரோனா வைரஸ் குடும்பத்தை சேர்ந்தது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர். தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் வகைகளை விட இது அதிக வீரியம் மிக்கது என்றும் தொற்றுப் பாதிப்புக்கு ஆளாகும் மூவரில் ஒருவர் உயிரிழக்கும் அபாயம் உள்ளது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு, ரஷ்யாவைச் சேர்ந்த செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளவை வருமாறு :-

தென் ஆபிரிக்காவில் வாழும் வௌவால்களிடம் நியோகோவ் வைரஸ் கண்டறியப்பட்டு உள்ளது என ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த புதிய வைரஸால் மனிதர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுமா என்பது குறித்து இன்னும் விரிவாக ஆய்வு நடத்தப்பட வேண்டும். இந்த வைரஸ் தொடர்பாக உலக விலங்குகள் நல அமைப்பு, உணவு மற்றும் விவசாய கழகம் மற்றும் ஐ.நாவின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்புடன் இணைந்து பணியாற்றி வருகிறோம்.

மனிதர்களிடம் ஏற்படும் 75 சதவீத தொற்று நோய்களுக்கு விலங்குகள் தான் ஆதாரமாக உள்ளன. பல வைரஸ்களுக்கு ஆதாரமுள்ள வௌவால்கள் உள்ளிட்ட விலங்குகளிடம் இருந்து தான் கொரோனா வைரஸ் பரவி வருகின்றன. சீனா வெளியிட்ட ஆய்வறிக்கை குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## துப்பாக்கியை வைத்துக்கொண்டு சமாதானம் பேசுகின்றதாம் ரஷ்யா



உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவின் செயற்பாடு, மேசை மீது துப்பாக்கியை வைத்துக்கொண்டு சமாதானப் பேச்சுக்கு வந்தனர் என கூறுவது போல் உள்ளது என ரஷ்யாவுக்கான அமெரிக்கதூதர் ஜான்சல்லிவன் தெரிவித்தார்.

உக்ரைனில் ரஷ்யர்கள் மற்றும் உக்ரேனியர்கள் வசிக்கின்றனர். அந்நாட்டை தங்கள் கைப்பிடியில் வைத்திருக்க ரஷ்யா விரும்புகிறது. உக்ரைன் அதிபர் செலன்ஸ்கி ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுடன் நெருக்கமாக செல்ல விரும்புகிறார். அவர்களது நேட்டோ கூட்டமைப்பிலும் இணைய திட்டமிடுகிறார். அதன் மூலம் நேட்டோ படைகள் உக்ரைனில் வந்தால் ரஷ்யாவுக்கு சிக்கல் ஏற்படும்.

இதனை அச்சுறுத்தலாக கருதி உக்ரைன் எல்லையில் ஆயிரக்கணக்கானோர் கொண்ட படைகளை அனுப்ப ரஷ்யா தயார் நிலையில் உள்ளது. இதனால் அப்பிராந்தியத்தில் போர் மேகம் சூழ்ந்துள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவின் செயற்பாடு பற்றி அந்நாட்டிற்கான அமெரிக்க தூதர் ஜான் சல்லிவன் கூறியதாவது:-

போரை விரும்பவில்லை என ரஷ்யா கூறுகிறது. ஆனால் இராணுவ போர் பயிற்சி என்ற பெயரில் பல்லாயிரக் கணக்கான ரஷ்ய துருப்புக்களை குவிப்பது அசாதாரணமானது. பேச்சுக்கு என வந்துவிட்டு மேஜை மீது துப்பாக்கியை வைத்துக்கொண்டு அமைதியை விரும்புகிறேன் என்பது அச்சுறுத்துவதாகும். ரஷ்ய அரசு அதன் சொல்லுக்கு உண்மையாக இருக்கும், உக்ரைனை ஆக்கிரமிக்க திட்டமிடாது என நம்புகிறோம். ஆனால் ஆக்கிரமிக்கும் திறன் அதற்கு உள்ளது என்பதே உண்மை.

உக்ரைன் பிரச்சினையில் பேச்சுக்கு திட்டமிடுதல் குறித்து அமெரிக்கா மற்றும் நேட்டோ அனுப்பிய எழுத்துப்பூர்வ ஆவணங்களுக்கு, ரஷ்யாவின் பதிலை வாஷிங்டன் எதிர்பார்க்கிறது. மேலும் உக்ரைனின் எல்லைகளுக்கு அருகிலிருந்து ரஷ்யா தனது துருப்புகளை திரும்பப் பெற வேண்டும்.

உக்ரைனுக்குள் ஊடுருவினால் ரஷ்யா மீது பொருளாதார தடை விதிப்பது என்பது மேற்கத்திய நாடுகளின் நடவடிக்கையில் ஒரு பகுதி மட்டுமே. ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகள் விதிப்பது, ரஷ்யாவிலிருந்து ஜேர்மனுக்கு செல்லும் இயற்கை எரிவாயு குழாயின் செயல்பாட்டை நிறுத்துவது போன்ற நடவடிக்கையும் இருக்கும். என கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 2022 – 23 பட்ஜெட் நாடாளுமன்றில் தாக்கல் டிஜிட்டல் கரன்சிகள் புழக்கத்திற்கு வரும்

2022- 23 நிதியாண்டுக்கான பட்ஜெட்டை நாடாளுமன்றத்தில் இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று தாக்கல் செய்தார் .

தனது உரையை 92 நிமிடங்களில் நிறைவுசெய்த அவர், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.2 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. நாம் கொரோனாக் காலகட்டத்திலும் வளர்ச்சியை நோக்கி பயணித்து வருகிறோம். தொலைநோக்கு திட்டங்களுடன் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். டிஜிட்டல் பொருளாதாரத்தை வளப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன, என்று குறிப்பிட்டு உரையை ஆரம்பித்தார்.

நடப்பாண்டில் 5 ஜி அலைக்கற்றைக்கு ஏலம் நடைபெறும். டிஜிட்டல் கரன்சியை ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்த உள்ளது. அதேநேரம், பிட்கொயின் போன்ற டிஜிட்டல் கரன்சி வருமானங்களுக்கு 30% வரி விதிக்கப்படும். பாரத் நெட் திட்டத்தின் மூலம் அனைத்து கிராமங்களிலும் இணையவழி சேவை தொடங்கப்படும். 2025 ஆம் ஆண்டுக்குள் கண்ணாடி ஒளியிழை குழாய் மூலம் அனைத்து கிராமங்களுக்கு இணைய வசதி வழங்கப்படும். நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் பத்திரப்பதிவுகளை மேற்கொள்ள ஒரு நாடு; ஒரே பதிவு முறையை கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பத்துடன் 'சிப்' பொருத்திய இ – பாஸ்போர்ட் முறை அறிமுகப்படுத்தப்படும் ஒன்றரை லட்சம் தபால் நிலையங்களில் டிஜிட்டல் பணப்பரிமாற்ற முறை அறிமுகப்படுத்தப்படும். 200 கல்வித் தொலைக்காட்சிகள் மாணவர்கள் மாநில மொழிகளில் கல்வி கற்பதற்காக உருவாக்கப்படும். அதுமட்டுமன்றி டிஜிட்டல் முறையிலான கற்பித்தல் ஊக்குவிக்கப்படும். அத்தோடு 1 - 12 ஆம் வகுப்பு வரை மாநில மொழி கல்வி ஊக்குவிக்கப்படும்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படும். 75 மாவட்டங்களில் டிஜிட்டல் வங்கி தொகுதிகள் ஏற்படுத்தப்படும். மாநிலங்களுக்கு உதவ 3 ஆண்டுகளுக்கு வட்டியில்லா கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. 2023 க்குள் 2,000 கி.மீ. தொலைவுக்கு ரயில்வே கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

வந்தே பாரத் திட்டத்தின் கீழ் அடுத்த நிதியாண்டில் 22,000 கி.மீ. தொலைவுக்கு சாலைக் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும் அடுத்த 3 ஆண்டுகளில் 400



வந்தே பாரத் ரயில்கள் அறிமுகப்படுத்தப்படும். வேளாண் பொருள்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலைக்காக ரூபா 2.7 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்படும், போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக பட்ஜெட்டை நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்து உரை நிகழ்த்தினார்.

இந்த பட்ஜெட்டுக்கு இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

# தமிழகத்தின் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தொகுதிப் பங்கீட்டினால் கூட்டணியில் விரிசல்

## பா.ஜ.க தனித்துப் போட்டியிடுவதாக அறிவிப்பு



தமிழக நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து எதிர்கொள்ளும் நோக்குடன் இடப்பங்கீடு தொடர்பாக பா.ஜனதா தலைவர்கள் அ.தி.மு.க.வினருடன் பேச்சு நடத்தியிருந்தனர். அப்போது 20 சதவீத இடங்கள் தர வேண்டும் என்று பா.ஜனதாவினர் வலியுறுத்தியபோதும், அ.தி.மு.க. தரப்பில் மிக குறைந்த எண்ணிக்கையிலேயே வார்டுகளை ஒதுக்கீடு செய்ய முடியும் என்று தீர்மானமாகத் தெரிவித்துவிட்டதாக செய்திகள் வெளியாகின.

நாகர்கோவில் மற்றும் கோவை பகுதிகளின் மேயர் பதவிகளை தங்களுக்கு ஒதுக்க வேண்டும் எனவும், வார்டுகளைப் பொறுத்தவரை தொகுதிக்கு ஒன்று வீதம் 21 வார்டுகளை வழங்கவேண்டும் என்றும் பா.ஜனதா வலியுறுத்திவந்தது. ஆனால், அ.தி.மு.க. தரப்பில் அதை ஏற்காத நிலையில், நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் ஏற்படவில்லை. இந்த நிலையில் அ.தி.மு. க.வினர் முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை நேற்று வெளியிட்டு விட்டனர். இது பா.ஜனதாவினரிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியதால், பா.ஜனதா தரப்பிலும் தனித்து போட்டியிட பட்டியல் தயார் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இழுபறி நீலை நீடித்ததால், தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை கட்சியின் மூத்த தலைவர்களுடன் நேற்று அவசர ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் சுதாகர் ரெட்டி, பொன். ராதா கிருஷ்ணன், சி.பி. ராதாகிருஷ்ணன், வானதி சீனிவாசன் ஆகியோரும் பங்கேற்றனர்.

அப்போது, வரும் தேர்தலில் கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி ஆலோசிக்கப்பட்டது. பா.ஜனதாவுக்கு மிகக்குறைந்த எண்ணிக்கையில் இடம் கொடுத்தால் ஏற்க வேண்டியதில்லை என்று கூட்டத்தில் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். காரசாரமாக பேசிய சிலர், அப்போது அவர்கள் தேவைக்கு நம்மை பயன்படுத்திக் கொண்டார்கள். இப்போது நமது சிறு எதிர்பார்ப்பைக்கூட நிறைவேற்ற அவர்கள் தயாரில்லை. எனவே, நாம் அவர்கள் தருவதை வாங்கிக் கொண்டு இருக்க வேண்டிய அவசியமில்லை, என்று வலியுறுத்தியுள்ளனர்.

அ.தி.மு.க. தரப்பில் இருந்து அழைப்பு வரும் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தபோதும், அழைப்பு எதுவும் வரவில்லை. எடப்பாடி பழனிசாமியும் இது பற்றி எதுவும் தெரிவிக்காமல், சேலத்துக்குச் சென்று விட்டதையடுத்து, தனித்து போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளில் இறங்குமாறு பா.ஜ.க.வினருக்கு தகவல் வழங்கப்பட்டிருக்கிறது. நேற்று பிற்பகலில், ஊடகங்களுக்கு தகவலளித்த பா.ஜனதா தலைவர் அண்ணாமலை, நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் பா.ஜ.க. தனித்து போட்டியிடுவதாக அறிவிப்பை வெளியிட்டார்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை அ.தி.மு.க. கூட்டணியுடன் இணைந்து சந்திப்பது தொடர்பாக அ.தி.மு.க. தலைவர்கள் ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோரை நேரடியாகச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினோம். அப்போது குறிப்பிட்ட எண்ணிக்கையில் இடங்களை வழங்குமாறு கேட்டோம். அதில் உடன்பாடு ஏற்படவில்லை. எனவே, தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் பா.ஜனதா தனித்து போட்டியிடுகிறது.

நம்முடைய கூட்டணி என்பது தேசிய ஜனநாயகக் கூட்டணியாக தொடர்ந்து இருக்கும். 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல்வரை கூட்டணியில் தொடர்ந்து இருப்போம். அவசியமான விடயங்களில் எங்களின் நிலைப்பாடு ஒன்றாகவே இருக்கும். தமிழகத்தில் தற்போதைய உள்ளாட்சித் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தனித்து போட்டியிடும். எங்களின் முதல் வேட்பாளர் பட்டியலை வெளியிடுகிறோம்.

கட்சிவளர்ச்சிக்கும் அடுத்தக்கட்ட நடவடிக்கைக்கும் நம்முடைய இலக்கை அடைவதற்கும் பிரதமர் மோடியின் கனவை ஒவ்வொரு இடத்துக்கும் எடுத்துச் செல்வதற்கும், வீடு வீடாக தாமரையைக் கொண்டு செல்வதற்கும் இது ஒரு வாய்ப்பு. எல்லா இடத்திலும் வெற்றிபெற உழைப்போம், என்று அண்ணாமலை தெரிவித்திருக்கிறார்.

# தமிழகத்தைச் சேர்ந்த 21 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்தது

நாகை மாவட்டத்திலிருந்து மீன் பிடிக்க நேற்று புறப்பட்டுச் சென்ற தமிழக மீனவர்கள் பருத்தித்துறை கடற்பரப்பிற்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது 9 படகுகளில் வந்த இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள், நாகை மீனவர்களின் இரண்டு படகுகளை சுற்றிவளைத்த தாகவும் அதன் பின்னர் அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர், 21 தமிழக மீனவர்களை கைது செய்ததுடன் அவர்களது இரண்டு படகுகளையும் கைப்பற்றி காங்கேசன் துறைமுகத்திற்கு கொண்டு சென்றதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

கடலில் மீன்பிடித்துக்கொண்டிருக்கும் தமிழக மீனவர்கள் மீது இலங்கை மீனவர்களும் கடற்படையினரும் கடற் கொள்ளையரும் தாக்குதல் நடத்துவதும், இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களை கைது செய்வதும் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாக தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

# உத்தரப் பிரதேசத்தில் மாற்றத்தை ஏற்படுத்த கடுமையாக உழைப்பதாக மோடி பிரசாரம்

உத்தரப் பிரதேசத்தில் அமைக்கப்படும் ஒட்சிசன் ஆலைகள், விவசாயிகளுக்கு வருவாய் ஈட்டுவதற்கான புதிய வழியை வழங்கும், என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி காணொலி மூலம் பிரசாரம் செய்த மோடி, விவசாயிகளிடமிருந்து உணவுத் தானியங்களை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளோம், இந்த இலக்கை அடைந்துள்ளோம். கடந்த ஐந்து ஆண்டுகளில் உணவு தானிய கொள்முதல் இரண்டு மடங்குக்கும் அதிகமாக உயர்துள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் மாற்றத்தை ஏற்படுத்த கடுமையாக உழைத்து வருகிறோம். மறுபுறம், அவர்கள் (சமாஜ்வாடி) உங்களை (பொதுமக்கள்) பழிவாங்குவதற்கான வாய்ப்பைத் தேடுகிறார்கள். பழிவாங்குவது அவர்களின் சித்தாந்தம். சட்டத்திற்கு மேலாக தங்களைக் கருதிக் கொண்டிருந்த மாஃபியாக்களுக்கும், குண்டர்களுக்கும் சட்டத்தின் அர்த்தத்தை உத்தரப் பிரதேச பா.ஜ.க. அரசு கற்றுக் கொடுத்துள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, மக்கள் அவர்களுக்கு பயந்து இடம்பெயர்வது பற்றிய செய்திகள் தினமும் வந்தன.

கடத்தல் உள்ளிட்ட சமூக விரோதச் செயல்கள் நடத்தர வர்க்கம் மற்றும் வணிகர்களின் வாழ்க்கையை அழித்துவிட்டன. கடந்த 5 ஆண்டுகளில் யோகி அரசு இந்தச் சூழ்நிலையில் இருந்து மாநிலத்தை மீட்டுள்ளது. – என்று இந்தியப் பிரதமர் தமது பிரசார உரையின்போது குறிப்பிட்டார்.



# சாதாரண மக்களுக்கு பட்ஜெட்டில் பலன் பூச்சியம்தான் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு

சாதாரண மக்களுக்கு பட்ஜெட்டில் பூச்சிய பலன்தான் உள்ளது என மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

இன்று இந்திய நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட 2022 – 23 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி, வேலையின்மை மற்றும் பணவீக்கத்தால் நசுக்கப்படும் வேளையில் சாதாரண பொது மக்களுக்கு பட்ஜெட்டில் பலன் பூச்சியமாகத்தான் உள்ளது. எதையுமே அடையாளப்படுத்தாத வெறும் பெரிய வார்த்தைகளால் அரசாங்கம் தோற்றுவிட்டது, இது பெகாசஸ் ஸ்பின் பட்ஜெட், என குறிப்பிட்டுள்ளார்.

# அதிபரின் இடமாற்றத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்




அதிபரின் தற்காலிக இடமாற்றத்தை இரத்துச் செய்ய கோரி சம்மாந்துறை கல்விக்கோட்டத்தின் கீழுள்ள கல்முனை, சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலயத்தின் பெற்றோர் மற்றும் மாணவர்கள் கவனவீர்ப்பு ஆர்பாட்டமொன்றை இன்று காலை முன்னெடுத்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பெற்றோர், அன்றாடம் கூலித்தொழிலை தங்களது ஜீவனோபாயமாக கொண்டு வாழ்க்கை நடாத்தும் பெற்றோர்களை அதிகமாக கொண்ட பிள்ளைகள் கல்வி கற்கும் இப்பாடசாலை சுமார் 40 வருட வரலாற்றைக் கொண்டது . இப்பாடசாலைக்கு அவ்வப் போது பல அதிபர்கள் நியமனம் பெற்று வந்த போதிலும் இந்தப் பாடசாலை கல்வியிலோ அல்லது பௌதீக அபிவிருத்தியிலோ முன்னேற்றம் காணவில்லை . இந்நிலையில் இரண்டரை வருடத்திற்கு முன்னர் இப்பாடசாலைக்கு புதிதாக நியமனம் பெற்று வந்த பெண் அதிபரான எம்.எம் . மஹிஸா பானு அதிபர் முதலில் பெற்றோருக்கும் பாடசாலைக்குமான தொடர்பை ஏற்படுத்தி கல்வி மற்றும் பௌதீக அபிவிருத்தியில் பாரிய மறுமலர்ச்சியை மிக குறுகிய காலத்திற்குள் ஏற்படுத்தினார் .

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 2020 ஆம் ஆண்டு ஒரே தடவையில் 3 மாணவர்களை சித்தி பெற வைத்து வரலாற்று சாதனை படைத்தார் . எனவே, இவ்வளர்ச்சியை சகித்துக்கொள்ள முடியாத சில தீய சக்திகளின் செயற்பாட்டினால், அதிபரை தற்காலிக இடமாற்றம் செய்ய கல்வி அதிகாரிகள் எடுத்த தீர்மானத்தை மீள்பரிசிலனை செய்து , இவ்விடமாற்றத்தை இரத்துச் செய்து மீண்டும் அதிபரை இப்பாடசாலைக்கு நியமிக்குமாறு கேட்டு கொண்டனர்.

அதிபரை மீண்டும் நியமிக்காத பட்சத்தில் பிள்ளைகளின் விடுகைப் பத்திரத்தை உடனடியாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கல்வி துறை உயரதிகாரிகளை கேட்டுக் கொண்டதுடன், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கான பெற்றோர்களின் கையெப்பமும், கோரிக்கையும் அடங்கிய மகஜரை சம்மாந்துறை கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஏ. சபூர் தம்பியிடம் கையளித்தனர்.

## தமது பாடசாலையை பொலித்தீன் பாவனை அற்ற பாடசாலையாகமாற்ற மாணவர்கள் உறுதியுரை

சுற்றுப்புற சூழலை சுத்தமாகவும், நிலைபேறான தகவும் மாற்றும் வகையில் கல்முனை அல் – அஸ்ஹர் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ .எச். அலி அக்பர் தலைமையில் சுத்தமான புறச் சூழல் எனும் தொனிப்பொருளில் பாடசாலையில் அதிகமாக வெளியேற்றப்படும் கடதாசி கழிவுகள் மற்றும் பொலித்தீன் பாவனையை தவிர்க்கும் விதமாகவும், இதனை குறைக்கும் முகமாகவும் அதற்கான வழிமுறைகள், ஒழுங்குகள் போன்றவற்றை எடுத்துரைக்கும் வகையில் பாடசாலை சுற்றாடல் கழகத்தின் ஏற்பாட்டில் நிகழ்வொன்று நேற்று பாடசாலையில் இடம்பெற்றிருந்தது.




காலை ஆராதனையில் பொலித்தீன் பாவனையற்ற, கடதாசி கழிவுகள் அற்ற பாடசாலையாக மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டு, விழிப்புணர்வு பதாகைகள் காட்சிக்கும் வைக்கப்பட்டிருந்தமையுடன் இதன் போது மாணவர்களின் உறுதியுரையும் இடம்பெற்றது.

இம் முன் மாதிரியான செயற்பாடு மூலம் பாடசாலை சுற்றுச் சூழல் சுத்தமடைவதுடன் ஒரு வழிகாட்டலாகவும் அமையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை மேலும் பசுமையான சுற்றுப் புறச்சூழல் உருவாக வேண்டும் என்பதே சகலரதும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

இதேவேளை குறித்த பாடசாலையில் டெங்கு நுளம்பு பரவலை சுற்று சூழலில் இருந்து கட்டுப்படுத்தும் வகையில் மாணவர்கள் மத்தியில் மாபெரும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு கடந்த வருடம் இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.




077 197 1667, 077 316 4796

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 02.08.1993 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருவோணம்
கி.பா - 88 செவ் - 8 இல்
தகைமை - BSc Soft ware தொழில் - Soft ware Eng.
எதிர்பார்ப்பு - Singapore இலங்கை பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 05.03.1991 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - 18 செவ் 7இல்
தகைமை - Business Management தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 12.12.1996 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - பூராடம் 2
கி.பா - 24 செவ் 4 இல்
தகைமை - G.C.E. A/L தொழில் - France
எதிர்பார்ப்பு - France இலங்கை மணமகன்

பிறந்த திகதி - 15.01.1990 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - பூரம்
கி.பா - 17 செவ் 4 இல்
தகைமை - பட்டதாரி தொழில் - France
எதிர்பார்ப்பு - France, இலங்கை மணமகன் தேவை

பிறந்த திகதி - 08.13.1990 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 24 செவ் 8 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன்

பிறந்த திகதி - 01.09.1992 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - சித்திரை 4
கி.பா - 16 செவ் 16 இல்
தகைமை - Bsc, Msc தொழில் - சித்த மருத்துவர்
எதிர்பார்ப்பு - Doctor,Eng. மணமகன்

பிறந்த திகதி - 11.09.1990 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 19 செவ் 7 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor, Eng. மணமகன்

பிறந்த திகதி - 03.09.1992 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - விசாகம் 4
கி.பா -20 செவ் 12 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன்

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 17.05.1990 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - திருவோணம் 4
கி.பா - 27 செவ் - 12 இல்
தகைமை - Chatted Final தொழில் - UK, PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி இலங்கை மணமகள் (இலங்கை வருவார்)

பிறந்த திகதி - 27.01.1986 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 25 செவ் 6 இல் தகைமை -G.C.E. A/L
தொழில் - France எதிர்பார்ப்பு - G.C.E. A/L மணமகள்.
இலங்கை வந்துள்ளார்.

பிறந்த திகதி - 06.04.1995 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம் 4
கி.பா - 47 செவ் 7 இல்
தகைமை - HNDA தொழில் - Company
எதிர்பார்ப்பு - பட்டதாரி உள்நாடு/ வெளிநாடு மணமகள்

பிறந்த திகதி - 28.09.1994 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை 3
கி.பா - 43 செவ் 8 இல் தகைமை - G.C.E. A/L
தொழில் - நிறுவன காசாளர் எதிர்பார்ப்பு - G.C.E. A/L
படித்த மணமகள் (காரைநகர் முன்னுரிமை)

பிறந்த திகதி - 21.11.1989 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 23 செவ் 1 இல்
தகைமை - Cima Complete தொழில் - நிறுவன உரிமையாளர்
எதிர்பார்ப்பு - உள்நாடு, வெளிநாடு மணமகள்

பிறந்த திகதி - 07....1987 மதம் - இந்து
ஜாதி - K பகுதி நட்சத்திரம் - ரேவதி 1
கி.பா - 65 செவ் 8 இல்
தகைமை - HNDA, Bcom தொழில் - நூலக உரிமையாளர்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 13.10.1984 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - கார்த்திகை 3
கி.பா - 69 செவ் 11இல்
தகைமை - HNDA தொழில் - UK, PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி UK அல்லது இலங்கை மணமகள்

பிறந்த திகதி -24.05.1981 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் 3
கி.பா - 25 செவ் 2 இல்
தகைமை - Bsc, Msc தொழில் - UK, PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் தைப்பொங்கல்



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தைப்பொங்கல் நிகழ்வு கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸிலின் வழிகாட்டலில் கலை, கலாசார பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். அனுசியா தலைமையிலான குழுவினரின் ஏற்பாட்டில் நேற்று பல்கலைக்கழகத்தில் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ். யோகராஜா, இந்த நிகழ்வு சமூக நல்லிணக்கத்திற்கு அவசியமானதொன்று என்றும், இவ்வாறான நிகழ்வில் பங்குகொள்வது மிகுந்த மன நிறைவைத் தருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

நிகழ்வில், கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் பிரதான உரையை நிகழ்த்தியதுடன் பீடத்தின் மூத்த விரிவுரையாளர்களும் உரையாற்றினர். இதன்போது கலந்து கொண்டிருந்தவர்களுக்கு பொங்கல் உணவுகள் பரிமாறப்பட்டு நிகழ்வுகள் முடிவுற்றன.

இந்நிகழ்வில் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# பொது இடங்களுக்கு செல்லும்போது மக்கள் கவனமாக நடக்கவேண்டும்!



## வைத்தியர் ஹேமந்த ஹேரத் கோரிக்கை

எதிர்வரும் நீண்ட வார இறுதி விடுமுறையில் பொது இடங்களுக்குச் செல்லும்போது மக்கள் மிகவும் கவனமாக இருக்குமாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு அவர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் உள்ள மக்கள் இவ்வாறான நீண்ட விடுமுறையில் பயணிக்க ஆசைப்படுகின்றனர் எனத் தெரிவித்த அவர் முடிந்தவரை பயணங்களை மேற்கொள்ளாமல் இருக்க முயற்சிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் கிட்டத்தட்ட 15 மில்லியன் மக்கள் இரண்டாவது டோஸை எடுத்துக் கொண்ட போதிலும் இதுவரையில் 5 மில்லியன் பேர் மட்டுமே மூன்றாவது டோஸைப் பெற்றுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பில் 21 வீதிகளுக்கு பூட்டு!

சுதந்திர தினத்தை முன்னிட்டு பெப்ரவரி 4 ஆம் திகதி கொழும்பில் உள்ள 21 வீதிகள் மூடப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் உள்ள இந்த 21 வீதிகளும் காலை 5 மணி முதல் சுதந்திர தின நடவடிக்கைகள் முடியும் வரை மூடப்படும் என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

இதனால் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு பொதுமக்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், அழைப்பிதழ் மற்றும் அந்தந்த கார் பார்க்கிங் விவரங்களைக் காண்பிக்கும் போது, பெப்ரவரி 4ஆம் திகதி காலை 7.30 மணி வரை, அழைப்பாளர்கள் தங்கள் வாகனங்களில் கொண்டாட்டங்கள் நடைபெறும் இடத்துக்குச் செல்லலாம் என்றும் அவர் அறிவித்தார்.

# 12 வயதுக்குட்பட் பிள்ளைகளுக்குத் தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் முடிவில்லை

12 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்குத் தடுப்பூசிசெலுத்துவது இன்னும் பரிசீலனையில் உள்ளது என லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் பணிப்பாளர் விஜேசூரிய தெரிவித்தார்.

எந்தவொரு வயதினருக்கும் தடுப்பூசி போடுவது முறையான அறிவியல் ஆராய்ச்சியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

பல நாடுகள் ஏற்கனவே ஐந்து வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு தடுப்பூசி போடத் தொடங்கியுள்ளன என்றும் எவ்வாறாயினும் 12 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்குத் தடுப்பூசி போடுவது தொடர்பாக முடிவெடுக்க தங்களுக்கு அதிக நேரம் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏனெனில் தாங்கள் இன்னும் அறிவியல் தரவுகளைப் பெறவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு, பெற்றோர்கள் இது தொடர்பாகக் கவனத்துடன் இருக்க வேண்டும் என்றும் 12 வயதுக்குட்பட்ட பிள்ளைகளையோ அல்லது வேறு எந்த வயதினரையோ கொரோனா போன்ற அறிகுறிகள் இருந்தால் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம் என் றும் அவர் கூறினார்.

தங்கள் பிள்ளைகளுக்கு இது போன்ற அறிகுறிகள் இருக்கும்போது பெற்றோர்கள் தங்கள் சொந்த முடிவுகளை எடுக்கக்கூடாது என்றும் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறுவது மிகவும் அவசியமானதென்றும் அவர் வலியுறுத்தினார்.

மாரவிலையைச் சேர்ந்த ஆறாம் தர மாணவி கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழந்த சம்பவத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பள்ளி மாணவி உடல் பருமனால் அவதிப்பட்டு வந்தார் என்றும் எவ்வாறாயினும் தாங்கள் இன்னும் குறித்த மாணவியைப் பற்றிய கூடுதல் தகவல்களைப் பெறவில்லை என்றும் அவர் கூறினார். இருப்பினும் பிரேத பரிசோதனையில் அவர் கடுமையான நிமோனியா யாவால் இறந்தார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் எனவும் அவர் மேலும் கூறினார்.

# 500 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நாட்டில் கொரோனாத் தொற்று!

நாட்டில் 500 கர்ப்பிணி தாய்மார்களுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில், குடும்ப நலப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சித்ரமாலி டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

கர்ப்பிணி தாய்மார்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்படுவது தற்போது அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுமி துஷ்பிரயோகம் ஆசிரியர் கைதானார்!

13 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் மேலதிக வகுப்பு நடத்தி வந்த ஆசிரியரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாணந்துறையில் பயிற்சி வகுப்பு நடத்தி வரும் ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான ஆசிரியர் சிறுமியை புத்தக அறைக்கு அழைத்து சென்று துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

வகுப்பு முடிந்ததும் நடந்த சம்பவத்தை சிறுமி தனது தந்தையிடம் கூறியமையையடுத்து பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து சந்தேக நபரான ஆசிரியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவின் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

# டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை இனங்காண விசேட தேடுதல் நடவடிக்கை

டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களைத் தேடி நேற்று (திங்கட்கிழமை) ஹொரணையில் விசேட ட்ரோன் மூலம் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒஃப்தி ஏர்ஃபோர்ஸ் ரொஷான் குணதிலகவின் வழிகாட்டலின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆளுநரின் செயற்பாட்டு அறை மற்றும் விமானப்படை இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டன.

ஹொரணை சுகாதார வைத்திய அதிகாரி, ஹொரண பொலிஸ் மற்றும் ஹொரண மாநகர சபை ஆகியோர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

ட்ரோன் கமெரா மூலம் நகரில் உள்ள கட்டடங்கள் உட்பட பல டெங்கு பரவும் இடங்களை இதனூடாக கண்டறிய முடிந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் குறித்த பகுதிகளுக்குச் சென்று எச்சரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அமைச்சர்களின் சம்பளத்திலிருந்து நீர் கட்டண நிலுவை அறவிடப்படும்

நீர் கட்டண நிலுவைப் பணத்தை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவிலிருந்து அறவீடு செய்து கொள்ளத் திட்டமிடப்பட் டுள்ளது.

இது தொடர்பிலான அமைச்சரவை பத்திர மொன்றை நீர்வழங்கல் அமைச்சு அமைச்சரவையில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

அமைச்சர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்த காலங்களில் அதிகாரபூர்வ இல்லங்களில் பயன்படுத்திய நீருக்கான கட்டணங்கள் செலுத் தப்படாது நிலுவையில் உள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

முன்னாள் மற்றும் தற் போதைய நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 45 உறுப் பினர்கள் இவ்வாறு கட்டணம் செலுத்தத் தவறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டண நிலுவை தொடர் பில் அதிகாரபூர்வமாகவும், தனிப்பட்ட ரீதியிலும் குறித்த நபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் பிரியந்த் பந்து விக்ரம தெரிவித்துள்ளார்.

# க.பொ.த. உயர்தரப் பரீட்சைக் காலத்தில் அனைவருக்கும் விடுமுறை வழங்கவேண்டும்

## ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்து

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலப்பகுதிகளில் அனைத்து மாணவர்களுக்கும் விடுமுறை வழங்கப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கோரியுள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளரிடம் இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார். உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலத்தில் ஆரம்ப பிரிவிற்கான பாடசாலைகளை நடத்த வேண்டாம் என அவர் கோரியுள்ளார்.

அண்மைய நாள்களில் கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் கோவிட் தொற்றுக் கூடுதலாகப் பரவி வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான ஒரு பின்னணியில் ஆரம்ப பிரிவு மாணவர்களை அழைத்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வது நோய் கட்டுப்பாட்டைப் பாதிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். விடுமுறைக் காலத்தின் பின்னர் நாட் டின் நிலைமையைக் கவனத்திற்கொண்டு பாடசாலை ஆரம்பிப்பது தொடர்பான தீர்மானம் எடுக்க முடியும் என ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கட்டம் கட்டமாக பாடசாலைகளுக்கு மாணவர்கள் அழைக்கப்பட்டு வந்த நிலையில், கடந்த ஜனவரி 10 ஆம் திகதி முதல் அனைத்து மாணவர்களும் பாடசாலைக்கு அழைக்கப்பட்டனர். இவ்வாறு அழைக்கப் பட்டதன் பின்னரே மாணவர்கள் மத்தியில் நோய்த்தொற்றுப் பரவுகை அதிகரித்தது என அவர் தெற்கு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.02.2022இல் வெளியிடப்பெற்றது.